2017 ஜூலை 14] **[திரு. எம்.சி. சம்பத்]**

அதன் தலைவர் ease of doing business *பற்றித்தான் பேசியிருக்கிறார். தொழில் நிறுவனங்களைப் பற்றிப் பேசவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

ஜி.எஸ்.டி. வரியிலிருந்து ஜவுளித் தொழிலுக்கு விலக்கு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டுள்ளதால், கரூர், ஈரோடு, சங்கரன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள்* V. *செந்தில்பாலாஜி, அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும், திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, முனைவர் க. பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. எம். இராமச்சந்திரன், திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், திரு. நா. கார்த்திக், திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், திருமதி எஸ். விஜயதரணி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு.* V. *செந்தில்பாலாஜி அவர்கள்.*

திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் தொழிலுக்கு* G.S.T.—*சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பினால் கரூர் மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக விளங்கக்கூடிய ஜவுளித் தொழில் முற்றிலும் பாதிக்கப்படக்கூடிய வகையில், அதை உற்பத்தி செய்யக்கூடிய தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. கரூர் மாவட்ட ஜவுளி உற்பத்தியாளர்களுடைய கோரிக்கையை ஏற்கக்கூடிய வகையில்* G.S.T.–*யிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். இந்த ஜவுளித் தொழிலைப் பொறுத்தவரையில்,* Cotton Yarn–*க்கு 5%,* Polyester

Yarn–க்கு *18%*, bleaching *5%*, dyeing *5%*, warping *5%*, sizing *18%*, stitching *18%*, cutting *18%*, knotting *5%* G.S.T. போட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் job works.

ஒரு குடும்பத்தில் இருக்கின்ற பெண் தன்னுடைய பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, ஒரு தையல்மிஷினை வைத்துக்கொண்டு, வீட்டிலேயே ஒரு குடும்பத் தொழிலாக, job work–*ஆக துணிகளைத் தைப்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்பாலாஜி, நான் உங்களுக்கு சிறப்புக் கவன ஈர்ப்பில் பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். மூன்று கட்சி உறுப்பினர்கள் இதில் பேச வேண்டும். நேரமில்லை. நேரத்தைக் கருதி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–50

திரு. V. செந்தில்பாலாஜி: *சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடிய வகையில்* G.S.T. *வரிகள் அமைந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, கரூர், ஈரோடு, சேலம், குமாரபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருக்கின்ற ஜவுளி உற்பத்தியாளர்களுடைய முக்கிய கோரிக்கையை ஏற்று, ஜவுளித் தொழிலுக்கு* GST *வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மத்திய அரசிடம் பேசி, ஜவுளித் தொழிலுக்கு* GST *வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தால் ஜவுளித் தொழிலுக்கு மிகப் பெரிய ஆபத்து*

2017 ஜுலை 14] **[திரு. தங்கம் தென்னரசு]**

ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவிலேயே இதுவரை ஜவுளித் தொழிலுக்கு இந்த அளவுக்கு வரி விதிக்கப்படவில்லை என்கின்ற நிலையில், இந்தச் சட்டத்தின் மூலமாக விதிக்கப்பட்டிருக்கக்கூடிய வரியை இரத்து செய்ய வேண்டுமென்று இன்றைக்கு மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில், குறிப்பாக கரூர், ஈரோடு, அருப்புக்கோட்டை, ராஜபாளையம், சங்கரன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னும்கூட நான் சொல்ல வேண்டுமென்றால், இதேபோல CENVAT வரியை ஜவுளித் தொழிலுக்கு விதித்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னெடுப்பு நடவடிக்கையின் காரணமாக முற்றிலும் அது நீக்கப்பட்டது. நெசவாளர்களுடைய நலன் கருதி அன்றைக்கு மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி, CENVAT வரியை முற்றிலும் நீக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் உண்டு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டத்திலும், நாமக்கல் மாவட்டத்திலும்கூட இன்றைக்கு இந்தப் போராட்டம் தீவிரமடைந்திருக்கிறது. இந்தப் பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிகள் இருக்கின்றன. அவர்களும் இந்த வரி உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகிறார்கள். இப்போது இந்தப் போராட்டம் தீவிரமடையக்கூடிய காரணத்தினாலே ஜவுளி மற்றும் விசைத்தறியை நம்பியிருக்கக்கூடிய தொழிலாளர்கள் மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலை வந்திருக்கின்றது. இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்பாலாஜி அவர்கள் சொன்னதுபோல பல்வேறு விகிதங்களிலே இன்றைக்கு இந்த வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. நூலுக்கு 5 சதவிகிதம், சாயத்திற்கு, dyeing–க்கு 5 சதவிகிதம் என்று பல்வேறு வரி விதிப்புகள் இருக்கின்றன. சிறு, குறு முதலீட்டாளர்கள் நிறைந்த தொழில் இந்த நெசவுத் தொழில். அவர்கள் அனைவரும் அவர்களுடைய returns–ஐ முற்றிலும் கணினிமயமாக்கிக் கொடுக்க வேண்டுமென்றால் பெரும் பாதிப்பு அவர்களுக்கு ஏற்படுகின்றது. மிக சிரமமான காரியமாக இது இருக்கின்றது. இன்னும் ஒன்று, e–way bill. ஓரிடத்திலிருந்து நூலை மற்றோர் இடத்திற்கு சாயத்திற்காகக் கொண்டு செல்லும்போது, போலீஸ்காரர் போய்த் தடுக்கலாம், தாசில்தார் சென்று பார்க்கலாம். இத்தனை பேரும்

சென்று பார்த்து, அதற்கு penalty 100 சதவிகிதம் போடப்படுகிற ஒரு நிலை வருகின்றபோது உள்ளபடியே மிகுந்த பாதிப்புக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். G.S.T. சட்டத்தை மிக வேகமாக, அவசரமாக ஏன் இந்த அரசு நிறைவேற்றியுள்ளது என நான் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டத்திலேயே இந்தப் பிரச்சினை இருந்தாலும், அவர்களே தலையிட்டு இந்த வரியை இரத்து செய்யக்கூடிய நிலை இல்லாமல் இருப்பது உள்ளபடியே எங்களுக்கு கவலையளிக்கிறது. எனவே, ஜவுளித் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சரக்கு மற்றும் சேவை வரியை உடனடியாக இரத்து செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை வலியுறுத்தி, நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 2½ இலட்சம் ஜவுளி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் GST வரியின் காரணமாகத் தொழிலை இழந்துள்ளார்கள். தினந்தோறும் சுமார் 2,500 லாரிகள் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கின்றன. நெசவாளர்கள் மற்றும் மக்கள் இதனால் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். கைத்தறி, கதர் ஆடைகளுக்கு வரியே இல்லாமல் இருந்த சூழ்நிலை மாறி, மறைமுகமாக தற்போது GST மூலமாக பருத்தி நூல், பஞ்சு, கழிவு பஞ்சுக்கு 5 சதவிகிதம்; பருத்தி ஆடை, ஆயத்த ஆடை, ஜரிகைக்கு 12 சதவிகிதம்; செயற்கை இழை நூல்கள், ஜவுளி இயந்திரங்கள், சாயப் பொருட்களுக்கு 18 சதவிகிதம் என்று இந்தத் தொழிலில் நுழைப்பதன் மூலமாக நேரடியாக இந்தத் தொழில் பாதிக்கப்பட்டதன் காரணமாக விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழிலே கடுமையாக நசுங்கிக் போகக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த GST வரியில் register செய்யாமல் நிறுவனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. லாரிகள், e–way bill–ஐப் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. லாரிகள் strike என்பது தீவிரப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நிறுவனங்களினுடைய strike–ம் தீவிரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டம்கூட கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. எனவே, இதை உடனடியாகக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, GST Council மூலமாக இதற்கு ஒரு தீர்வை நிதியமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் இதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தங்கள் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் விசைத்தறி இவை ஒரே இடத்தில், ஒரே கூரையில், ஒரே தொழில்நுட்பத்தோடு முடிகின்ற தொழில் அல்ல. நிலத்தில் விவசாயிகள் அரும்பாடுபட்டு விளையச் செய்யும் பருத்தியை கொள்முதல் செய்து, அதனை ginning ஆலையில் சுத்தம் செய்து, நூற்பாலைகளில் நூலாக உற்பத்தி செய்து, அந்த நூலை தறிகளில் நெய்வதற்கு ஏற்றவாறு doubling எனப்படும் நூல் முறுக்கேற்றம் செய்து நூலினை சாயம் தோய்த்து, sizing எனப்படும் பாகு ஏற்றுதல் போன்ற பணிகளைச் செய்து, தறிகளில் நெசவாளர்கள் நெய்து, துணியாக உருமாற்றி, அந்தத் துணிகளுக்குத் தேவையான அச்சிடுதல் போன்ற பதனிடும் பணிகளைச் செய்து, நாம் அணிவதற்கு ஏற்றவகையில் முழுமையான ஆடையாக நெய்வதுவரை, 9 பல்வேறு நிலைகளில் பல்வேறுகட்டப் பணிகள் நடைபெறுகின்றன. இவ்வாறு ஒரு துணியானது, பல நிலைகளில் பலமுனை தொழில்நுட்பத்தைக் கடந்து, பலதரப்பட்ட தொழிலாளர்களின் உழைப்பைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. மூலப் பொருளான பருத்தியானது துணியாகும் வரை, ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே G.S.T. வரி விதிக்கப்படும் நிலை தற்போது உள்ளது. இந்த G.S.T. வரி விதிக்கப்படுவதற்கு முன்னர் என்னென்ன பொருட்களுக்கு எப்படி வரி விதிக்கப்பட்டது என்பது குறித்தும், பின்னர் எப்படி வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்தும் என்னிடத்திலே பட்டியல் இருக்கிறது. அதை விரிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நேரமாகும் என்பதனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எனக்கு இன்று நேரமில்லை. மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: அதை நான் விட்டுவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10–7–2017 அன்று கீழ்க்கண்ட விசைத்தறிச் சங்கங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, சரக்கு மற்றும் சேவை வரியை நீக்குவது தொடர்பாக நேரில் சந்தித்து, கோரிக்கை வைத்தனர்: ஈரோடு, கரூர், சோமனூர், சக்கம்பட்டி, அருப்புக்கோட்டை, சங்கரன்கோவில், சத்திரப்பட்டி, மேச்சேரி, சேலம், சுப்பலாபுரம், குமாரபாளையம், கோயம்புத்தூர், ராஜபாளையம், திருநெல்வேலி, விருதுநகர். ஆக, ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விசைத்தறி federation-ன் தலைவர்கள், நிருவாகிகள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நெசவாளர்களின்பால் கொண்ட அக்கறையின் காரணமாக, 10–7–2017 அன்று நாடு முழுவதும் உள்ள விசைத்தறி நெசவாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தனர். அப்போது நெசவாளர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு கேட்டு, நெசவாளர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருவதைத் தெரிவித்தார்கள். மேலும், இதனை மத்திய அரசுக்கு வலியுறுத்தும்விதமாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களை, கைத்தறித் துறை அரசுச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் புதுடில்லி சென்று, மத்திய அமைச்சர்கள் மற்றும் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை சந்தித்து, G.S.T. வரியை நீக்குவதற்கும், சில இனங்களில் வரியைக் குறைப்பதற்கும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இதேபோன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் மத்திய அரசின் G.S.T. Council–க்கு நெசவாளர்களின் கோரிக்கைகளை எடுத்துரைத்து, G.S.T. வரிவிதிப்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு அறிவுரை

2017 ஜூலை 14] **[திரு. ஓ.எஸ். மணியன்]**

வழங்கியுள்ளார்கள். எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவுற்றதும், நாங்கள் புதுடில்லி சென்று, நெசவாளர்கள் விரும்புகின்ற விதத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதனை இம்மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) கீழடியில் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை வைத்து அருங்காட்சியகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகாளும் தமிழுக்கு ஏற்றம் தரவே, அவதாரம் எடுத்து வந்த அரசியல் பூங்காற்று, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை திக்கெட்டும் புகழ் மணக்கும் திருவிழாவாக்கி, சங்கத் தமிழின் பெருமையைப் பரப்பிய தங்கத் தாரகையின் புகழ் வழியில், தாய் அரசாளும் காலம்தான் தமிழ் செழித்து வாழும் காலம் என்று அம்மாவின் பொற்பாதம் வணங்கி, நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட "கீழடியில் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை வைத்து அருங்காட்சியகம் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.